# மகாகவி பாரதியின் பெண்விடுதலை

**முனைவர்ப.மகேஸ்வரி**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**(அரசுஉதவி)**
**என்.ஜி.எம் கல்லூரி,**
**பொள்ளாச்சி.**

## முன்னுரை

அன்போடும் பணிவோடும் பகுக்கப்பட்ட பட்டறிவோடும் திகழும் பெண்ணியம் போற்றும் பாரதமும் இமயம் வரை புகழ்தொட்ட பாரதமும் இதமாகும். இத்தகைய பண்பினையும் அன்பினையும் பகுத்தறிவையும் வளரச்செய்து ‘‘பாட்டுத் திறத்தாலே இவ்வுலகத்தைப் பாவித்திட வேண்டும்’’ என்று உறுதியுடன் பாடிய பாரதி நெருப்பெனச்சுட்டு, தென்றல்என வருடி, நாமெனக்காத்து, தரணியெனத்தாங்கும் இனிய வரிகள் கொண்ட மகாகவி என்றும் தேசியக்கவி என்றும் புகழ்பெற்ற சுப்பிரமணிய பாரதியின் சுடர்மிகு வரிகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பெண்களின் நிலை

ஆணும் பெண்ணும் சமூகத்தின் இரு பக்கங்களாக இருந்தபோதும் ஆரம்பம் முதலே பெண்களின் நிலை ஆண்களின் நிலைக்குக் கீழாகவே இருந்தன. சங்க காலத்திற்குப்பின் சமூகசீர்திருத்தத்தின் விளைவாக விவேகானந்தர், ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, ராமகிஷ்ணர், இராமலிங்க அடிகள் போன்றோர் பெண்கள் விடுதலைக்கு முற்பட்டனர். இவர்களைத்தொடர்ந்து, பாரதி வாழ்ந்த காலத்தில்தான் பெண்விடுதலைக் கருத்துக்கள் உலகமெங்கும் துளிர்க்கத் தொடங்கின. பாரதி தன் எழுத்துக்கள்மூலம் மக்களிடையே தேசிய, சமூக சீர்திருத்த இயக்கத்தையும் பெண் முன்னேற்றத்தையும் தன் கொள்கையாக வலியுறுத்தியது. பாரதியின் பெண்விடுதலை பற்றிய சிந்தனையை நோக்கத்தக்கது.

## பாரதி கண்ட முதல் பெண்

பாரதியார் காசி நகரத்துக்குச் சென்று திரும்பும் வழியில் கல்கத்தா சென்றார். சுவாமி விவேகானந்தரின் மாணவியான சகோதரி நிவேதிதாவை அங்கே அவர் பேட்டி கண்டார். இச்சந்திப்பு பாரதியின் உள்ளத்தில் பெரும்மாற்றங்களைக் கொண்டுவந்தது. பாரதபெண்களின் சுதந்திரத்திற்காக பாடுபட வேண்டும். சமுதாயத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துக் கட்ட வேண்டும், பெண்கள் முன்னேற ஆவண செய்ய வேண்டும் என்றெல்லாம் எண்ணத் தொடங்கினார். சகோதரி நிவேதிதாவின் தொடர்பு பாரதியாரைப் பெரிதும் தாக்கி உருமாற்றிற்று. அச்சகோதரியை சக்தியின் அவதாரமாக பாரதி போற்றினார். தம்முடைய இரண்டு தேசியப்பாடல் தொகுப்புக்களை நிவேதிதாவிற்குச் சமர்ப்பணம் செய்தார். அந்நூலின் முன்னுரையில், ‘எனக்கு ஒரு கடிகையிலே (சிறிது நேரத்திலே) மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப்பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியும் பகவான் - விவேகானந்தருடைய தருமபுத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு’ என்று அவர் எழுதினார். நிவேதிதாவின் சந்திப்பு பாரதிக்கு பெரிய ஊக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக தமிழகம் திரும்பிய பாரதியாருடைய தேசபக்தி, கனல்வீசும் தேசியக் கட்டுரைகளை எழுதும்படி அவரை மென்மேலும் தூண்டிற்று.

## பெண்கல்வி

அடிமைகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு விடுதலை கொடுத்தால் அதனின்றும் யுகப்பிரளயம் நிச்சயம் நேரிடும். இருபது, முப்பது வருடங்களுக்கு முன்பு பெண்கள் அடிமைப்பட்டிருந்த காலத்தில் பெண்கல்வி ஏற்பட்டால், மாதர் ஒழுக்கத்தில் தவறி விடுவார்களென்று தமிழ்நாட்டில் பலர் கூறினர். இக்கால கட்டத்தில்தான் விடிவெள்ளி நட்சத்திரமாய் உதித்த பாரதி, பெண்களின் மனநிலை கண்டு வெகுண்டு எழுந்து, தமிழ்நாட்டில் பெண்கல்வி அனைவருக்கும் அவசியம் என்பதை உணர்த்தினார். பெண்களை வீட்டிற்குள் அடைத்து ஒடுக்கி வைத்திருந்த காலத்தில் பாரதி புயலாய் வீசிய உரைகள்,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி மிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்...!
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

- பாரதியார் கவிதைகள்

என்னும் பாடல் மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வைப்பற்றி பாரதி உணர்த்தினார்.

முழுமையான பெண்ணை உருவாக்க, கல்வியை ஒரு கருவியாகக் கண்டார் பாரதி. கல்வியின் நற்பயனைப் போற்றும் பாரதியின் சொற்கள் மிகுந்த வேகம் கொண்டவை. அன்னிய நாட்டின் கல்வி நெறியை ஒழித்துக்கட்டி, பாரதம் கண்ட பண்புக் கல்வியைத் தந்து, பெண்களை உயர்த்த பாரதி முயன்றார். நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் அவர் நெஞ்சு பொறுக்காது. உணவுஉற்பத்தியிலும் தொழில் திறமையிலும், உடல்வலிமையிலும் யோகப்பயிற்சியிலும் அன்பின் முதிர்ச்சியிலும் முழுமை கண்ட பெண்ணையே. பாரதியின் லட்சிய பெண்ணாகக் கண்டார்.

பாரதியார் எந்தப் பாடலையும் மிகவும் கம்பீரமாகவும், உணர்ச்சி ததும்படியும் பாடுவார். கேட்பவர்களுக்கு மெய்சிலிர்க்கும் சில பாடல்களில் அவர் தம் வாழ்க்கையே சித்தரிக்கிறார். சாதாரணமாக கும்மி போன்ற பாமர மெட்டுக்களிலும், ஹிந்துஸ்தானி மெட்டுக்களிலும், உயர்ந்தக் கீர்த்தனைகளிலுமாக அவர் அநேகம் கவிதைகளைப் படைத்திருக்கறார். அதோடு நில்லாமல் 1906-ல் **"இந்தியா"** என்னும் வாரப் பத்திரிக்கையை துவக்கி அதன்மூலம் தேசபக்திக்கு வழிவகுத்தார்.

துடிப்பு மிகுந்த பாரதியார், லாலா லஜபதிராய், அரவிந்தர், திலகர் ஆகியோருடைய வழியைப் பின்பற்றினார். புதியக் கருத்துக்கள், புதிய சந்தம், புதிய சொற்கட்டு ஆகியவை அவர் கவிதைகளை அலங்கரித்தன. **'சுதேச கீதங்கள்'** என்ற தலைப்பில் அவர் கவிதைகள் தொகுக்கப்பட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டன.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று ஆர்ப்பரிக்கிறார். ஆனாதிக்க சமூகத்தில் வாழ்ந்த பெண்களின் நிலை மாற வேண்டும் என்று பாரதி எண்ணியது ஒன்றும் தவறில்லை. பாரதி வாழ்ந்த கால கட்டத்தைச் சூழலில் பெண்நிலை அவ்வாறிருந்தது என்பதைப் பறைசாற்றுவதாக இவரது வரிகள் அமைகின்றன.

## பெண் தொழிற்சுதந்திரம்

பெண்கள் தொழில் செய்வது குறித்தும் பாரதிக்குத் தெளிவான கருத்து இருந்தது. பெண்கள் அவரவர் விருப்புக்கும், திறமைக்கும் ஏற்ப எத்தகைய தொழிலிலும் ஈடுபடலாம் என்பது அவர் கருத்து. பெண் விடுதலைக்கான ஆரம்பப்படிகளாக அவர் குறிப்பிடும் விதிகள் தெளிவாகத் தெரிகிறது. பாரதி பெண்கள் அரசியலில் பங்கெடுக்கவும், பதவிகள் வகிக்கவும் வேண்டுமெனக் கூறினார். இன்றைய நிலையில் இது முக்கிய கருத்தாக அமைகின்றன.

## பெண் சொத்துரிமை

பெண்களுக்கு பிதுரார்ஜித் சொத்தில் உரிமை இருக்க வேண்டும் என பாரதி கூறியது மிகமுக்கியமானதாகும். அக்கால கட்டத்தில் பெண் சொத்துரிமையின்மை, பெண்ணடிமைத்தனத்தின் மூலவேர்களில் ஒன்றாக அமைந்திருந்தது. பாரதியார் பெண்களுக்குச் சொத்துரிமை தரவேண்டும் என்பதை கூறுவதுடன் தானும்அதையே பின்பற்றினார். விடுதலையடைந்தால் இறந்துபோன கணவனின் சொத்து அப்பெண்ணின் சொத்தாக மதிக்கப்பட வேண்டுமென 'பெண்' என்ற கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## பெண் திருமணம்

பாரதியார், திருமணம் என்பது இரு தனிநபர்களின் சுதந்திரச் சேர்க்கையாக இருக்க வேண்டுமெனவும் அதனைப் பின்பற்றுமாறும், மக்களை அறிவுறுத்துகின்றார். ரஷ்யாவின் விவாகவிதியின் மூலம் கவரப்பட்ட பாரதி இந்தியாவில் காணப்படும் விவாகக் கண்ணோட்டம் மாற வேண்டுமெனவும் கூறுகிறார். எனவே தான் சிறுவயது திருமணம், பலதார மணம் ஆகியவற்றை நீக்கி மறுமண உரிமை, திருமணத்தில் பெண்ணின் விருப்பம், விவாகரத்து உரிமை ஆகியவற்றைப்பற்றி பெண்கள் விடுதலைக்கான ஆரம்பப்படிகள் என்று பாரதி கூறுகின்றனார்.

## பெண்விடுதலை

பாரதி வாழ்ந்த காலச்சூழலில் பெண்கள் மிகவும் அடிமை நிலையில் நடத்தப்பட்டனர். அவர்களுக்குக் கல்வி உரிமையும் அதிக அளவில் வழங்கப்படவில்லை. மேலும் அப்பெண்களின் வாழ்க்கை ஆணைச் சார்ந்து இயங்கும் நிலையில் இருந்தது. திருமண வாழ்க்கையில் பெண்கள் மிகவும் பின்தங்கியிருந்தனர் எனலாம். ஆகவே இது மாறவேண்டும் எனும் நோக்கில்,

> ‘‘பெண்டாட்டி தனையடிமைப்படுத்த வேண்டி
> பெண்குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ’’

என்று தம் கவிதையில் எழுதியுள்ளார். அதேபோல ஒவ்வொரு கணவனும், தனது மனைவியைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்பதையும்,

> ‘‘மண்ணுக்குள்ளே எவ்வுயிருத் தெய்வமென்றால்
> மனையாளுந் தெய்வமன்றோ’’

என படைத்துள்ளார். பெண்களின் அறிவையும் சிலமூடர்கள் பயன்படுத்தாமல் இருக்கின்றனர் என்பதையும்,

“பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்
புவிபேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
நல்ல மாதரறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதைமை அகற்றிடும் காணீர்” - பாரதியார் கவிதைகள்,
(பாடல் 9,10ப.199,)

என்றும் படைத்துள்ளார். மேலும் ஒவ்வொரு பெண்ணும் தீயவரைக் கண்டால் அஞ்சாமல், அவர்களுக்கு எதிராகத் தைரியமாகச் செயல்பட வேண்டும். அவர்களைக்கண்டு பயங்கொள்ளாமல், அவர்களிடம் தைரியமாக பேச வேண்டும் என்பதையும்,

“பாதகம் செய்வோரைக் கண்டால் நாம்
பயங் கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா”

- (பாரதியார் கவிதைகள், பாடல் 8, ப.197)

என்றும் உணர்ச்சி ததும்ப படைத்துள்ளார்.

**தகனம்**

உடன்கட்டை ஏறுதல் தகனமானது அன்றைய நாளில் ‘பாயர் தினம்’ எனப் பெயரிட்டு விசேஷதினமாகக் கொண்டாடப்பட்டது. மக்கள் கூட்டாக நின்று இதனைக் காண்பர். ஸதி தகனத்தில் இறங்கும் பெண்மணி யமுனா நதியில் ஸ்நானம் செய்துவிட்டு, கிராம அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட ஓர் சிறு ஸ்தலத்திற்கு வந்துசேர்வாள். வறட்டிகள் அங்கே தயார்ப்படுத்தி

வைக்கப்பட்டிருக்கும். அவள் முகத்திலே, வம்பதார்களால் கொடுக்கப்பட்ட துணியொன்றை அடுக்கி நெருப்பைக் கொளுத்திவிட்டு, அந்நெருப்பிலே மூடபக்தி கொண்ட மகாபாரத மிருக ஜனங்கள் எண்ணெய், நெல் முதலியவற்றைக் கொண்டு சொரிவர்.

அப்போது மத்தளங்கள் அடித்தும் ‘‘ராம் ராம்’’ என்று கூக்குரலிட்டும், அவளது அழுகைக்குரல் வெளியிலே கேளாதபடி தடுத்து விடுவார்கள். இதனைப் பாரதி,

‘‘நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்’’ –

(பாரதியார் கவிதைகள், ப.22)

என்று சாடுகிறார். அப்போது அந்த ஸம்பர்தார்கள் தாம் ஏதோ சாமானியமாக நினைத்து உதவிகள் செய்து இறந்தவுடன் பெண் இறக்க வேண்டும் என்ற மரபு இருந்தாலும், ‘‘ராம ராம’’ என்ற மத அழுத்தம் கொடுத்து அப்பெண்ணை உயிருடன் கடவுள் நிலைக்குக்கொண்டு சென்றதை மரபுமீறிய செயலாக இருப்பதுடன், அப்பெண் சமயத்தளத்தில் திருவிழா என்ற பெயரில் ஒடுக்குதலுக்க மாறியுள்ளதை வன்மையாகக் கண்டித்தார்.

**துணை நின்ற நூல்கள்**


1. சி. சுப்பிரமணிய பாரதியார்
   பாரதியார் கவிதைகள்,
   லியோ புக் பப்ளி‘ர்ஸ்,
   சி.ஐ.டி. நகர்,
   சென்னை – 35.
   முதற்பதிப்பு – 2012.

2. வெல்க வெல்கவே
   விவேகானந்த கேந்திர பிரகா‘ன்
   நெ.5, சிங்காரச்சாரி தெரு,
   திருவல்லிக்கேணி,
   சென்னை – 600 005.